# குறுந்தொகையில் முல்லைத்திணைக் காட்டு விலங்குகள் பறவைகளின் வழி பொருள்முதல்வாதக் கூறுகள்

# In The Kurunthogai, the Materialism Elements Conveyed Through Forest Animals and Birds of the Mullai Landscape

**ரா. டில்லிபாபு,**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் -632115.
**Dillibabu R,**
Research Scholar, Department of Tamil, Thiruvalluvar University, Serkkadu, Vellore -632115. Gmail ID
dillibabu04201999@gmail.com ,7826965800.
ORCID iD: https://orcid.org/0009-0006-4013-4988

**முனைவர் நா. சிவகுரு,**
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் -632115.
**Dr.N. Sivaguru,**
Associate Professor, Department of Tamil, Thiruvalluvar University, Serkkadu,
Vellore -632115.
Gmail ID arasi162010@gmail.com ,9486148837.
ORCiD: https://orcid.org/0000-0001-9425-1078

## Abstract

Sangam literature comprises the anthologies known as *Ettuthogai* and *Pattuppāṭṭu*. The people of that era lived in close harmony with nature. The ancient Tamils classified their landscapes into five distinct regions: **Kurinji**, **Mullai**, **Marutham**, **Neithal** and **Pālai**. They sourced their food and essential materials directly from nature, based on the characteristics of each landscape. The **Mullai thinai** refers to forested regions and areas adjacent to forests. The inhabitants of Mullai lands were deeply dependent on the forest for their livelihood. They hunted wild animals and also domesticated them. Forest animals and birds symbolically represent the occupations, social structures, community life, security, and belief systems of the Mullai people. **Materialism** is a philosophical concept that explains the world primarily through physical matter, asserting that emotions, mind, and soul are all products of material existence. The activities of the Mullai people were inherently material-based, and their way of life reflects materialist principles. The aim of this research is to explore and analyze how the elements of **materialism** are expressed through the lives and practices of the Mullai landscape people in Sangam literature.

**Keywords -** Sangam Literature, Materialism, Mullai Landscape, Animals and Birds, Emotion.

## ஆய்வுச்சுருக்கம்

சங்க இலக்கியம் என்பது எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களின் தொகுப்பு ஆகும். மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர். பழந்தமிழர்கள் நிலங்களைக் குறிஞ்சி, முல்லை, மருதும், நெய்தல், பாலை எனும் ஐந்து நிலப் பகுதிகளாகப் பிரித்தனர். அவர்கள் தமது நிலங்களில் கிடைக்கும் உணவுப் பொருள்களையும் தனக்குத் தேவையானப் பொருள்களையும் இயற்கையிடம் இருந்தே பெற்றுக்கொண்டனர். முல்லைத்திணை என்பது காடும், காடுச் சார்ந்த நிலமும் ஆகும். முல்லை நிலத்து மக்கள் காட்டை முழுமையாகச் சார்ந்து வாழ்ந்துள்ளனர். காட்டு விலங்குகளை வேட்டையாடியும், பழக்கப்படுத்தியும் வாழ்ந்துள்ளனர். காட்டு விலங்குகள், பறவைகள் என்னும் பொருள் முல்லை நில மக்களின் தொழில், சமூகம், சமுதாயம், பாதுகாப்பு,

நம்பிக்கை என மக்கள் செயல்பாடுகளை வெளிப்படுத்துவனவாக அமைகிறது. பொருள்முதல்வாதம் என்பது இயற்கைப் பொருளை முதன்மையாகக் கொண்டு உலகத்தை விளக்கும் கோட்பாடு ஆகும். உணர்வு, மனம், ஆன்மா முதலானவற்றை எல்லாம் பொருள் தான் தோற்றுவிக்கிறது. முல்லை நில மக்களின் செயல்பாடுகள் பொருள் சார்ந்து உள்ளன. அவை, . பொருள்முதல்வாதக் கூறுகளை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. இவற்றை ஆய்வதே இந்த ஆய்வின் நோக்கமாக அமைகிறது.

**திறவுச் சொற்கள் –** சங்க இலக்கியம், பொருள்முதல்வாதம், முல்லைத்திணை, விலங்குகள் பறவைகள், உணர்வு.

**முன்னுரை**

சங்க இலக்கியம் நிலம் சார்ந்த தகவல்களை மக்களின் உணர்வுகளின் வெளிப்பாடாகப் பதிவு செய்துள்ளது. இந்நூல் "நல்ல குறுந்தொகை" எனப் புலவர்களால் பாராட்டப்படுகிறது. திணை வைப்பு முறையைக் கூறும்போது தொல்காப்பியர் முல்லைத்திணையை முதன்மையாகக் கூறுகிறார். குறுந்தொகையில் உள்ள முல்லைத்திணைப் பாடல்கள் காட்டு விலங்குகள் பறவைகள் பற்றிய பதிவுகளையும் மக்களின் செயல்பாடுகளையும் வெளிப்படுத்துவனாக உள்ளன. பொருள்முதல்வாதம் எனும் தத்துவக் கோட்பாடு, இயற்கைப் பொருள்களை முதன்மையாக கொள்கிறது. குறுந்தொகையின் முல்லைத்திணையில் மனிதனின் உணர்வுகள் பற்றியும் விளக்குகிறது. ஆய்விற்கு எடுக்கப்பட்டுள்ள நோக்கமானது முல்லை நில மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்தும் பொருளாகக் காட்டு விலங்குகள், பறவைகள் இருக்கிறது. அத்துடன் பொருள்முதல்வாதக் கூறுகள் விளக்குவதாக இக்கட்டுரை அமைக்கிறது.

**பொருள்முதல்வாதம்**

முல்லை நிலம் என்றால் காடும், காடுச் சார்ந்த நிலமும் என்று தொல்காப்பிய நூற்பா வழி அறியலாம். அவை,

**"மாயோன் மேய காடுறை உலகமும்"** (தொல்.பொரு. - 5.1)

தொல்காப்பியர் ஒரு நிலத்தைப் பற்றி அறிவதற்கு இடம், காலம் என்ற அடிப்படையை விளக்குகிறார். அதுவே **முதல் பொருள்** ஆகும். அவை,

**"முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே**
**நுவலும் காலை முறைசிறந் தனவே**
**பாடலுள் பயின்றவை நாடும் காலை"** (தொல்.பொரு. - 3)

முதல் பொருள், கருப்பொருள் நிலத்தின் பொருட்களை குறிப்பனவாக உள்ளன. உரிப் பொருளை மட்டும் உணர்வை குறிப்பனவாக அமைத்துள்ளனர். **"பொருளே எல்லாவற்றுக்கும் அடிப்படையானது, மனம், அல்லது உணர்வு அல்லது ஆன்மா என்பது இரண்டாவது என்பது பொருள்முதல்வாதக் கொள்கையாகும்." (பிச்சமுத்து, 2006)** பொருள்முதல்வாதம் என்றால் பொருள் மற்றும் பொருள் சார்ந்த உணர்வுகள்(மனம்) என்று பொருள்முதல்வாதிகள் கூறுவார்கள். இதனை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியர்

வகைப்படுத்தியுள்ளார். **எல்லாம், நிலம் என்ற பொருள் மேல் இயக்கமும், மாற்றமும் கொண்ட பொருளாக உள்ளது.** இதனை, இயங்கியல் பொருள்முதல்வாதம் என்பர். **“அண்டத்திலுள்ள அனைத்துப் பொருள்களும் இயங்கிக் கொண்டே இருப்பதோடு மாறிக் கொண்டும் இருக்கின்றன. எல்லாம் தோன்றிக் கொண்டும் மறைந்து கொண்டும் இருக்கின்றன” என்பதே இயக்கஇயல் பொருள்முதல்வாதம். (பிச்சமுத்து, 2006)** தொல்காப்பியர் உலகப் பொருள்களை இரண்டாகப் பிரித்து வகைப்படுத்தியுள்ளார். தொல்காப்பியம் சொல்லாதிகாரம் நூற்பா 1 யில் உயர்திணை அஃறிணை விளக்கம் தருகிறார். **“உலகப் பொருள்கள் அனைத்தையும் உயர்திணை, அஃறிணை என்னும் இருதிணைக்குள் அடக்குவது தமிழ் மரபாக விளங்குகிறது”** (மோனிஷா .கி,2024, பக்.179) இவற்றில் கூறுகின்ற இருதிணைகளில் அஃறிணை மட்டும் பொருளாகப் பார்க்கப்படுகிறது. முல்லை நில மக்களுக்கு காட்டு விலங்குளான மான், பன்றி முதிலியான உணவாகின்றன. அவை உற்பத்தி செய்யப்படுதில்லை. எனினும், அவை வேட்டை என்ற தொழில் மூலம் உருவாகும் உழைப்பின் பொருளாகப் பார்க்கப்பட்டன. விலங்குகளுக்கும் முல்லை நில மக்களுக்கும் உள்ள தொடர்பையும் உறவையும் அறிவதன்வழிச் சமூக அமைப்பைக் காணலாம். சமூகம் பற்றியும் வரலாறு பற்றியும் அறிவது வரலாற்றுப் பொருள்முதல்வாதம் ஆகும். **“ஒரு சமுதாயத்தில் உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவு முதல் ஏனைய உறவுகளுக்கும் இடையிலுள்ள தொடர்புகளைப் புலப்படுத்துவதே வரலாற்றுப் பொருள்முதல்வாதக் கொள்கையாகும்.”(பிச்சமுத்து, 2006)** அறிவியல் சார்ந்தாக பொருள்முதல்வாதம் அமைந்துள்ளது. **“ஒரு பொருளின் நுண்ணிய பார்வையை அறிவியல் என்று குறிப்பிடலாம்” (அ.கவிதா. ப15)** அறிவியல் என்பது ஆய்வின் வழியாக ஒரு பொருளைக் காட்டுகிறது அல்லது விளக்குகிறது. எல்லா பொருளும் இயக்கத்தையும் மாற்றத்தையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது என்று இயக்கவியல் பொருள்முதல்வாதம் விளக்கும்.

**காட்டு விலங்குகள் பறவைகள்**

குறுந்தொகையில் முல்லைத்திணைப் பாடலில் **காட்டு விலங்குகளான மான், பாம்பு, காட்டுப் பூனை, யானை** போன்றவையும். **காட்டுக் கோழி, மயில், காக்கைப் போன்ற பறவைகளையும்** காணப்படுக்கின்றன. குறுந்தொகையில் முல்லைத்திணைப் பாடல்கள் வழியாக முல்லை நில மக்கள் தாம் வாழும் நிலப்பகுதியில் மனிதனுக்குத் தொடர்புடைய விலங்குகளைப் பாடல்களின் வழியாக பதிவுச் செய்துள்ளனர்.



**மான்**



முல்லைத் திணைப் பாடல்களில் அதிகமான மான் பதிவுகள் இருப்பதற்கு காரணம் முல்லை நில மக்கள் முதலில் வேட்டை தொழில் செய்துள்ளனர். வேட்டைச் சமூக மக்கள் மான்களை அதிகமாக வேட்டை ஆடியுள்ளனர். மானின் இறைச்சி உணவுவைக் கொண்டு பசி பிணியைப் போக்கியுள்ளனர். **வேட்டைச் சமூகத்தின் தொடர்ச்சியாக கால்நடைச் சமூகம், வேளாண் சமூகம்** தோற்றம் பெறுகின்றன. பொதுவுடைமைச் சமுதாயத்தில் மூன்று சமூகத்தைச் சார்ந்த மக்கள் மான்களுடன் அதிக நேரத்தைக் கழித்துள்ளனர். **மானை வேட்டை ஆடவும், பொறி வைத்துப் பிடிக்கவும், மான் தினைப் பயிரை மேயாமல் பாதுகாப்பதற்கும் என முல்லை நில மக்களின் செயல்கள் மானுடன் தொடர்பு கொண்டுள்ளதைக் காட்டுகிறது.** மானின் வாழ்வியலைக் காட்டுவனவாக அமைந்துள்ளது. மான் எங்கு தங்கும் என்பதை அறிந்து வைத்துள்ளனர் முல்லை நில மக்கள். அவர்களின் உணர்வோடு தொடர்புபடுத்தி மானின் செயல்களைப் பதிவு செய்துள்ளனர்.

**"மான்ஏறு மடப்பிணை தழீஇ மருள் கூர்ந்து**
**கானம் நண்ணிய புதல்மறைந்து ஒடுங்கவும்"** (குறு.319.1-2)

ஆண் மான் தன் இளம் பெண் மானை தழுவிக் கொண்டு காட்டில் உள்ள புதர்களில் தங்கும். மான் காட்டில் எங்கு தங்கும் என்பதைத் தெறிந்து வைத்துள்ளனர். அதனை, வேட்டைச் சமூக காலக்கட்டத்தில் மக்கள் மான்கள் கிடைக்காத போது அதன் குட்டியைப் பிடித்து வந்து வளர்த்துள்ளனர். வளர்க்கப்பட்ட மான்களை வைத்து பிற மான்களை வேட்டை ஆடினர். பிற மானைப் பிடிப்பதற்குப் பெரும்பாலும் பெண் மானை பிணையம் வைப்பார்கள். பெண் மானை வைத்து ஆண் மான்களை வேட்டை ஆடியுள்ளனர். வேட்டையாட உதவியாக இருந்த பெண் மானை பழந்தமிழர் **பிணைமான்** என்று அழைத்தனர். தலைவி, மானின் செயல்களைச் சொல்லி, "தலைவன் தன்னுடன் இல்லையே" என விலங்களின் மேல் உணர்வை வெளிப்படுத்துகிறாள். அவை,

**"பழமழைக் கலித்த புதுப்புன வரகின்**
**இரலை மேய்ந்த குறைத்தலைப் பாவை"** (குறு.220.1-2)

இதற்கு முன் பெய்த மழையால் புன் செய் நிலத்தில் வரகு பயிர் செய்தோம். அந்த பயிரை **இரலை என்னும் ஆண்மான்** மேய்ந்து வரகு பயிர் தலை குறைந்த தோற்றத்தைக் கொண்டுள்ளதாகப் பதிவு செய்கிறாள். வேளாண் சமூகம் தோற்றம் பெற்ற காலத்தில் வரகு பயிரையும், பல தினைப் பயிர்களையும் பாதுகாத்து வந்துள்ளனர். இது, **தினைப் புனம் காத்தல்** என்று அழைக்கப்படும். அதாவது, முல்லை நில மக்கள் பகலும் இரவும் பயிர்களைப் பாதுகாத்துள்ளனர். பகலில் பெண்கள் கிளி, மயில் போன்ற பறவைகளிடமிருந்து வரகு பயிர்களைப் பாதுகாத்தனர். இரவில் ஆண்கள் மான், பன்றி, யானை போன்ற விலங்குகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாத்தனர். இரவில் அதிகமாக மான்கள்தான் மேய்கின்றன அவற்றுள் ஆண்மான் கொம்புகளுடன் பயம்தரக் கூடியவையாக இருப்பதால் ஆண் மானை **இரலைமான்** என்று அழைக்கின்றன. தலைவி, மான்கள் கூட்டமாக உணவு தேடி போகும் என்பதை அறிந்து மான் என்னும் பொருள் மேல் தன்

உணர்வை வெளிப்படுத்துகிறாள் ஏன் என்றால் தலைவன் இரவில் மான்களைப்பார்ப்பரா என்பதற்காகப் பாடலடிகளில் ஆண் மான் உணவு தேடி சென்றதைப் பதிவு செய்கின்றாள். மேலும்,

**"வன்பரல் தெள்ளறல் பருகிய இரலை தன்**
**இன்புறு துணையொடு மாறு வந்து உகளத்**
**தான்வந் தன்றே தளிதரு தண்கார்"** (குறு. 65.1-3)

கார் கால மழையால் பாறைகள் இடையில் தெளிந்த தண்ணீரைப் பருகிய ஆண்மானும் பெண்மானும் இணைந்து துள்ளி விளையாடுகிறது. காட்டில் மான்கள் உயர்ந்த மேட்டுபகுதியில் உள்ள புற்களை மேய்ந்து விளையாடும். இது வேட்டைச் சமூகத்தில் மான்கள் எங்கு உலாவரும் என்பதை அறிந்துள்ளதை உணர்த்துகிறது. தலைவி, தலைவன் கார் காலத்தில் வருவதாக சொன்ன காலம் வந்துவிட்டது. மான்கள் தன்துணையுடன் இன்பத்தில் இருக்கிறது. தலைவன் என்னுடன் இல்லையே என்பதை மானின் செயல்கள் வழியாக உணர்வை வெளிப்படுத்துகிறாள்.

**"சிறுதலைப் பிணையின் தீர்ந்த நெறிகோட்டு**
**இரலை மானையும் காண்பர்கொல், நமரே?"** (குறு.183.3-4)





பிரிந்த தலைவி, சொல்கிறாள் தன்னை போல் **பிணை மானையும்(பெண்மான்)**, வளைந்த கொம்பு உடைய **இரலை மானையும்(ஆண்மான்)** தலைவர் காண்பாரா? என்று கேட்கிறாள். வேடர்கள் பிடித்து வைத்த பிணை மானைத் தலைவன் காண்பரா என்னுடைய நினைவுகள் அவருக்கு வருமா? என்று தலைவி தன்உணர்வுகளை வெளிப்படுத்துகிறாள்.

**முல்லைத்திணைப் பாடல்களில் மான் என்னும் பொருளின் மேல் மனிதனின் உணர்வுகள் வெளிப்படுகின்றன. பொருள்முதல்வாதத்தின் அடிப்படை ஆக அமைகிறது.** இயற்கை வர்ணனையில் உள்ள பொருட்களும், அதன் மூலம் வெளிப்படுத்தும் மனித உணர்வுகளும் பொருள் ஆகும். பொருள்முதல்வாதம் தத்துவக் கோட்பாடு முல்லைத்திணைப் பாடல்களுக்கு மட்டும் அல்ல பிறதிணைகளுக்கும் பொருந்தும். சங்க இலக்கியமும் இக்கோட்பாட்டை உள்ளடக்கியதே ஆகும். இவற்றில், தத்துவம் மட்டும் அல்ல அறிவியல் சார்ந்தக் கோட்பாடுகளான இயங்கியல் பொருள்முதல்வாதம், வரலாற்றுப் பொருள்முதல்வாதம் ஆகியவைற்றையும் காணமுடிகிறது. மான் என்னும் பொருள் மனிதனை இயக்கியுள்ளது. மான் காட்டு புதர்களில் தங்குவதையும், மான் வரகு தினைகள் உண்பதையும், மான் உலா வருவதையும், குன்றுகள் இடையில் தண்ணீர் பருகுவதையும் முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள் அறிந்துள்ளனர். இப்பாடல்கள் மானின் பண்புகளையும் மனிதனின் செயல்களையும் வெளிப்படுத்துகின்றன. மானின் பண்புகளும் செயல்களும் ஒரே காலக்கட்டத்தில் நடைபெறவில்லை. வேட்டைச் சமூகம், கால்நடைச் சமூகம், வேளாண் சமூகம் என வெவ்வெறான காலத்தில் மானின் இயக்கங்களை மனிதனின்

இயக்களுடன் தொடர்பு படுத்தி பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இப்பதிவில் இயங்கியல் பொருள்முதல்வாதக் கூறுகளான **இயக்கம், மாற்றம், தொடர்பு** காணப்படுகிறது. வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்பது இயங்கியல் பொருள்முதல்வாதத்தின் வளர்ச்சியே ஆகும். ஒரு பொருளின் இயக்கம், பண்புகள், முரண்பாடுகள் எல்லாம் மாற்றம் அடைந்து கொண்டு இருக்கும். இவ்மாற்றமானது புதிய பொருளைத் தோற்றுவிக்கும். **வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்பது உலகில் உள்ள பொருட்கள் அனைத்தும் புதிய பொருள் கிடையாது, எல்லாம் ஒரு பொருளின் மாற்றத்தால் தோன்றியவையே ஆகும். பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து பொருட்களும் தனித்து இருப்பது இல்லை, எல்லா பொருளும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாக உள்ளது. ஒரு பொருளின் மாற்றங்களையும் தொடர்புகளையும் காலவரிசையில் உருவான வரலாற்றையும் பற்றி கூறுவது வரலாற்றுப் பொருள்முதல்வாதம் ஆகும்.** மான் என்ற பொருள் இயக்கத்தின் வழியாக முல்லை நிலத்துடன் தொடர்பு கொண்டு முல்லை நில மக்களின் சமூகத்தை அறிவனவாக உள்ளது. மான் என்ற பொது பெயர் கால மாற்றத்தால் இரலை, பிணை என்ற காரணப் பெயர்களைப் பெறுகிறது. மானின் செயல்பாடுகளை ஆராய்ந்து உணர்வதன் மூலம் முல்லை நில மக்களை அறிந்து கொள்ளமுடிகிறது. மானின் செயல்கள் மான் உண்ணும் உணவுகள், சுற்றி திரியும் பகுதிகள், தங்கும் இடம் போன்ற பதிவுகள் வேட்டைச் சமூகத்தின் பிரதிபலிப்பாகிறது. மான் என்ற பொது பெயருக்கு இரலை, பிணை என்ற காரணப் பெயர் தோன்றுவதற்குச் சில காலம் கடந்து இருப்பது தெரியவருகிறது. முல்லை நில மக்கள் பயிர் செய்ய ஆரம்பித்துள்ளனர். தொடர்ச்சியாக வரகு பயிர் செய்துள்ளதையும், மான் அதை மெய்ந்துள்ளதையும் குறுந்தொகை 220 ஆம் பாடல் விளக்குகிறது. வேட்டைச் சமூகம் தொடங்கி கால்நடைச் சமூகம் கடந்து வேளாண் சமூகம் வரை மானின் செயல்கள் மூலம் கால மாற்றம் அடைந்து இருப்பதை வெளிப்படுத்துகிறது. மான் என்ற பொருளின் தொடர்ச்சி முல்லை நில மக்களின் சமூக பிரிவுகளையும் மாற்றங்களையும் மக்களின் செயல்கள் வரலாற்றுப் பொருள்முதல்வாதக் கூறுகளான பொருளின் மாற்றம், பொருளின் தொடர்பு, பொருளின் இயக்கம், பொருளின் வரலாறு ஆகியவைற்றை வெளிப்படுத்துகிறது. முல்லைத் திணைப் பாடல்களில் பிற விலங்குளான பாம்பு, யானை, தேரைகள், காட்டுப் பூனைப் போன்றவை இடம் பெறுகின்றன.

**பாம்பு**

**"கடிதுஇடி உருமின் பாம்புபை அவிய"** (குறு.391.3)



கார் காலத்தில் இடியுடன் மழைப்பெய்கிறது. இடியின் ஒலியால் பாம்பு படம் அடங்கியது. பாம்புகளுக்கு காது கிடையாது உணர்வுகள் மட்டும் தான். தலைவி, சொல்கிறாள், இடியின் ஒலியை நாம் காதுகளால் கேட்கின்றோம் அது பயத்தையும் தலைவின் உடன் இல்லை என்ற உணர்வையும் வெளிப்படுத்துகிறாள். இப்பாடல் அடியில் வரும் **பாம்பு நல்லபாம்பு** குறிக்கிறது. மேலும்,

**"…. …… ……. …… பொறிவரி**

**வெஞ்சின அரவின் பைந்தலை துமிய”** (குறு.190.3-4)



புள்ளிக்கள் வரிகள் கொண்ட பாம்பு எப்போதும் கோபத்துடன் சிற்றத்துடன் இருக்கும். அப்பாம்பின் தலை துண்டிக்கும் படி பெரிய இடிமுழக்கம் நடு இரவில் வந்து மழைப் பெய்தது. இரவில் தலைவி தனிமையில் இருக்கும்போது இடி ஒசைக் கேட்டு துன்பத்திலும் பயத்திலும் இருக்கிறாள் என்ற உணர்வு பாடலில் வெளிப்படுகிறது. விசம் உள்ள பாம்புக்கு **அரவம்** என்று முல்லை நில மக்கள் பெயர் வைத்துள்ளனர். இப்பாடல் அடி **கண்ணாடி விரியன் பாம்பை** குறிப்பிடவனவாக உள்ளது.

பாம்பு என்ற பொருள், பயம் என்னும் உணர்வை வெளிப்படுத்துகிறது. பொருள்முதல்வாதக் கூறுகளான பொருள் சார்ந்த உணர்வுகள் பாடல்களிலும் பயின்று வந்துள்ளதை அறியலாம். முதல் பாடல் அடியில் பாம்பு இடியின் அதிர்வை, உணர்ந்து படம் எடுத்து விளையாடிய பாம்பு தலை அடங்கியது. இயற்கையாகவே பாம்புகளுக்கு காது கிடையாது, உணர்வுகளின் மூலமாக இறைகளையும் ஆபத்துகளையும் உணர்கின்றன. இந்த தகவலை அன்றைய முல்லை நில மக்கள் அறிந்துள்ளனர். பாம்பு என்ற சொல்லுக்குப் பின் பல காலங்களில் பிறகு அதன் உருவ சித்தரிப்பைக் கொண்டு சிறப்பு பெயர்களையும் வைத்துள்ளனர். காட்டில் பல பாம்புகள் வாழ்கின்றன. அதில் விசம் உள்ள பாம்பு, விசம் இல்லாத பாம்பு என அறிவதற்குப் பாம்பின் தோற்ற அமைப்பு துணைப்புரிகிறது. விசம் உள்ள பாம்பை **அரவம்** என்றதற்குக் காரணம் பாம்பின் அருகில் அரவே இருக்கக் கூடாது என்பதற்காக சொல்லபட்டுள்ளது. விசம் தலையில் இருப்பதால் பாம்பின் தலையைத் துண்டாக்க வேண்டும், என்பதை முல்லை நில மக்கள் அறிந்திருந்தனர் என்பதை இலக்கியப் பதிவுகளின் வழியே அறியமுடிகிறது.

**யானை**

**“கையுடை நல்மாப் பிடியொடு பொருந்தி**
**மைஅணி மருங்கின் மலையகம் சேரவும்”** (குறு.319.3-4)



துதிக்கையுடைய நல்ல ஆண் யானைப் **பிடி என்னும் பெண் யானை** உடன் சேர்ந்து இருள் பொருந்திய மலைப்பக்கமாக தங்கும். தலைவனைப் பிரிந்து தனிமையில் இருக்கிறாள் தலைவி, கார் கால மழையும் யானையின் செயலையும் தலைவிக்குத் துன்பத்தை தருவனவாக வெளிப்படுகின்றன. யானை என்பது குறிஞ்சி நிலத்துக்கு உரிய விலங்கு ஆகும். குறிஞ்சி நிலம், மலையும் மலைச் சார்ந்த நிலமும் ஆகும். யானை மலை பக்கத்தில் தங்குவதை முல்லை நில மக்கள் தங்களின் வாழ் நில விலங்குகளை அறிந்ததைப் போல் அறிந்துள்ளனர். காரணம் முல்லை நில மக்கள் மலை நிலத்து மக்களிடமிருந்து பண்டமாற்ற முறையில் இறைச்சியை வாங்கிய நிலையிலிருந்து அறிந்திருக்கலாம். கால்நடை மேய்ச்சலின்போதும் மலையில் யானை இருப்பதை

அறிந்திருக்கலாம். வேட்டையின்போது பக்கத்து நிலமான குறிஞ்சி நிலத்தில் வேட்டைச் செய்தபோதும் அறிந்திருக்காலம். குறிஞ்சியும் முல்லையும் தொடர்ச்சியாக அடுத்தடுத்து அமைந்த நிலமாக இருப்பதன் காரணமாக யானை முல்லை நிலத்திற்கு வந்து மீண்டும் தன் இருப்பிடமான குறிஞ்சி நிலத்திற்கு சென்று இருப்பதைக் கண்டுணர்ந்து பதிவு செய்துள்ளனர்.

**காட்டுப் பூனை**

**"இருவிசேர் மருங்கில் பூத்த முல்லை**
**வெருகுசிரித் தன்ன பசுவீ மென்பிணிக்**
**குறுமுகை .... ..... ..... ...... "** (குறு.220. 3-4)



வரகு பயிர் அறுவடை முடித்த தாள்களை முல்லைக் கொடி இறுகச்சேர்த்து பிடித்துள்ளது. முல்லை மொட்டுகள் கூரான முனையை உடையனவாக உள்ளன. அது பார்ப்பதற்கு காட்டுப் பூனையின் பற்கள் போல் பயத்தை உருவாக்குவனவாக உள்ளன. தனிமையில் இருக்கும் தலைவிக்கு முல்லை பூவின் மொட்டு காட்டுப் பூனையின் பற்கள் போல் இருப்பதைக் கண்டு பயம் உண்டாகிறது. காட்டுப்பூனை வேட்டைச் சமூகத்தில் இருந்து கால்நடைச் சமூகத்தைக் கடந்து வேளாண் சமூகம் வரை வந்து இருக்கலாம். காட்டுப்பூனைப் பற்களின் வரிசையை வேட்டைத் தொழில் மூலம் மட்டுமே அறிந்து இருக்க முடிவும். முல்லை நில மக்களின் வாழ்வியலில் காட்டுவிலங்குகளின் செயல்கள் பிரதிபலிக்கின்றன. விலங்கின் வழியாக முல்லை நில மக்களின் தொழில்கள், சமூகம், சமுதாயம், பொருளாதரம் போன்ற மக்களின் பண்புகள் வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

**காட்டுப்பறவைகள்**

காட்டுவிலங்குகள் போலவே முல்லை நில மக்கள் பறவையின் செயல்களை அறிந்து வைத்துள்ளனர். **பொருளாக இங்கு பார்பது பறவைகள்**. முல்லை நிலத்துக்கு உரிய பறவைகள் **மயில், காட்டுக்கோழிகள், காக்கைப்** பற்றி பதிவுகள் முல்லைத் திணைப்பாடலில் இடம் பெற்றுள்ளன. பறவையை வைத்து கார்காலத்தை அறிவதற்கும் மற்றும் பொருளாதரம் உயர்த்துவதற்கும் பயன்படுத்துகின்றனர். இயற்கையிடம் மனிதன் கற்று கொள்ளும் பாடத்தை எல்லாம் அதன் மேலே செயல்படுத்திப் பார்க்கிறான். குடும்பம் என்ற கூட்டுவாழ்க்கையை கற்றுக் கொடுக்கும் பறவைக் கூட்டங்கள் பற்றியும் அறியலாம்.

**கானங்கோழி (காட்டுக்கோழி)**

**"கானங் கோழிக் கவர்குரற் சேவல்**
**ஒண்பொறி எருத்தில் தண்சிதர் உறைப்பப்**
**பதல் நீர் வாரும் பூநாறு புறவில்"** (குறு.242.1-3)

கானங்கோழி கவரக்கூடிய இரட்டைக் குரலில் கூவும். சேவலின் ஒள்ளிய புள்ளிகளையுடைய கழுத்தின் மேல் தண்ணிய நீர்த்துளிகள் படிந்துள்ளது. புதர்களில் மழையால்



நீர் வழிகின்றது. முல்லை நிலத்தில் மலர்மணம் விசுகிறது. இப்பாடல் அடிகளில் வரும் **கானங்கோழி** என்ற சொல் இன்றும் முல்லை நில பகுதியான வட ஆற்காடு மாவட்டங்களில் பயன்பாட்டில் உள்ளது. இலக்கியம் பதிவு செய்த வர்ணனைகளான கவரக்கூடிய குரல் ஓசை, கருப்பு நிறத்தில் வெள்ளை புள்ளிகள் கொண்ட உருவம், நீர் பகுதிகளின் அருகில் உள்ள புதர்களில் தங்குதல் ஆகியவைற்றை நேரில் பார்த்து இங்கு உறுதி செய்யப்படுள்ளது. இவை, கார்காலத்தை உணர்த்துவனவாக அமைந்துள்ளன. வேட்டைச் சமூகமான முல்லை நில மக்கள் பறவைகள் தங்கும் இடத்தையும் அதன் செயல்களையும் அறிந்து வைத்துள்ளதைக் காணலாம்.

**மஞ்ஞை (மயில்)**



கார் காலம் வருவதை மகிழ்ச்சியாக வரவேற்கும் பறவை மயில் ஆகும். குறுந்தொகையில் முல்லைத் திணைப் பாடலில் **மயில்** என்ற பறவையை **மஞ்ஞை** என்ற பெயரைக் கொண்டு வழங்கியுள்ளனர்.

**"மடவ வாழி மஞ்ஞை மாஇனம்**
**கால மாரி பெய்தென அதன் எதிர்**
**ஆல்லும் ஆலின பிடவும் பூத்தன"** (குறு.251.1-3)

**மாரி** என்ற சொல் பெரும் மழை மற்றும் தொடர் மழையைக் குறிக்கிறது. அந்த மழையானது கார் காலத்தை உணர்த்துவதை **மஞ்ஞை** எனும் மயில் என்ற உயிருள்ள பொருளின் செயல்களை வைத்து அறிந்துள்ளனர். தொடர் மழையினால் மின்னல் இடி ஓசைக்கு எதிராக மயில் கூட்டம் கார்காலம் என்று கருதி அகவி ஆடுகிறது. அந்நேரம் பிடவம் பூ பூத்து உள்ளது என்பதை இப்பாடலடிகள் பதிவு செய்துள்ளன. மேலும்,

**"……. …….. …….. மின்னுபு**
**வான்ஏர்பு இரங்கும் ஒன்றோ? அதன் எதிர்**
**கான மஞ்ஞை கடிய ஏங்கும்"** (குறு.194.1-3)

கார் கால மேகமானது மின்னிக்கொண்டு இடி ஓசையுடன் வருகிறது. அதற்கு எதிராக காட்டில் உள்ள மயில் கூட்டம் அகவும் மீண்டும் மீண்டும் அகவி ஓலியேழுப்பும். மழையை எதிர்பார்க்கும் மயில் போல தலைவனின் வருகையை எதிர்ப்பார்க்கும் தலைவியின் உணர்வை வெளிப்படுத்துவதாக பாடல் உள்ளது. தலைவி, மயில் என்ற பொருள் மேல் தன் உணர்வையும் தன்னுடையச் செயல்களையும் தொடர்புபடுத்தி பேசுகிறாள். இது பொருள்முதல்வாதத் தத்துவம் ஆகும். மேலும் ஒரு சான்று,

**"பூஞ்சினை இருந்த போழ்கண் மஞ்ஞை**

**தா அம்நீர் நனந்தலை புலம்பக்**
**கூஉம் தோழி! பெரும்பே தையவே!"** (குறு.391.7-9)

கார் கால மழையால் பூக்கள் மரக்கிளையில் பூத்து குலுங்குகின்றன. அது பார்ப்பதற்கு மஞ்ஞை என்னும் மயிலின் தோகைக்கண் போல இருக்கிறது. மழையால் காட்டுக்குள் ஓடையில் நீர் பெருகி ஓடுகிறது. மயில் கூட்டம் மகிழ்ச்சியல் அங்கும் இங்கும் தாவி கூவுகிறது. நீர் ஓடும் ஓசையையும் மயில் ஆகவும் ஓசையையும் தலைவி, தலைவன் தன்னுடன் இல்லையே என்று வருந்துகிறாள். இது வேறும் இயற்கையின் நிகழ்வு தான் என்று தெறிந்தும் அதன் மனம் பேதையாக துன்பப்படுகிறது. தலைவியின் இயற்கை பற்றிய புரிதலை இங்கு காணமுடிகிறது.

மஞ்ஞை என்னும் பறவையின் மீது சமூக நிகழ்வுகள் கட்டமைக்கப்பட்டுள்ளது. கார் காலத்தில் மக்கள் கூட்டமாக இருப்பதையும், பிரிந்தவர்கள் மழையால் ஒன்று சேர்வதையும், குடும்பம் என்ற சமூக அடிப்படையைப் பாடல்கள் மூலம் வெளிப்படுத்தி இருப்பதையும் அறிய முடிகிறது. மயில்கள் கூட்டமாக இருப்பதைக் காட்டுவதன் மூலம் கூட்டுவாழ்க்கை உணர்த்தப்படுகிறது. முல்லை நில மக்கள் கார் காலத்தில் ஒன்று சேர்ந்து பிறகு உணவு உற்பத்தியில் இடுபட்டுள்ளனர்.

**காக்கை**

**"விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே"** (குறு.210. 6)





காக்கை என்றும் தனித்து வாழ்வதுதில்லை. அதற்கு உணவு கிடைத்தால் தனக்காக வைத்துகொள்ளாது பிற காக்கையைக் கரைந்து அழைக்கும், அழைத்து சேர்ந்து உண்ணும். பறவைகளில் காக்கைக்கு ஞாபகசக்தி அதிகமாகும். காக்கை கரைந்தால் வீட்டுக்கு விருந்தினர்கள் வருவார்கள் என்ற தமிழர்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். சொல்ல போனால் '**பறவைகள் அனைத்தும் புதியதாக விலங்குகளும் மனிதர்களும் பார்த்தால் கத்தும் கூச்சல் போடும் அதனைப் பாதுகாத்துக்கொள்ள'. இந்த செயலின் பண்பை அறிந்த பழந்தமிழர்கள் காக்கைக்கு உணவு அளித்து விட்டு அருகில் வளர்த்து வந்துள்ளனர்**. உலகில் வாழும் எல்லாச் சமூக மக்களும் தமிழர் பண்பாடு போல விலங்குகளையும், பறவைகளையும் பாதுகாப்பிற்கு பயன்படுத்திவந்துள்ளனர். பண்பாடு என்பது ஒரு சமூகத்திற்கு பொதுவான ஒரே செயல் முறைக்களைக் கொண்டதாகும். முல்லை நிலத்தில் வாழும் மக்களின் பழக்க வழக்கம், நம்பிக்கை, வாழ்க்கை முறைப் பற்றி கூறுவது பண்பாடு. இப்பண்பாடு பொதுவானது என்பதால் சமுதாயத்திற்கு ஏற்ற ஒன்றாக உள்ளது. உயிர்கள் பாதுகாத்தும் மதிப்பு கொடுத்தும் வளர்க்கப்படுகின்றன. தகவல் அறிவதற்கும் பாதுகாப்பை உணர்வதற்கும் '**காக்கையைப்' போல 'நாய்'** இன்று அனைவரின் வீட்டிலும் வளர்க்கப்படுகின்றன. இந்த தொடர்ச்சியானது வரலாற்றுப் பொருள்முதல்வாதக் கூறுகள் ஆகும்.

**முடிவுரை**

- தொல்காப்பியர் முதல்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற அமைப்பில் பாடல்கள் பார்க்கப்படவேண்டும் என்று கூறுகிறார். முதல்பொருள், கருப்பொருள் இரண்டும் நிலத்தையும் நிலத்தின் பொருள்களையும் குறிக்கிறது. உரிப்பொருள் உணர்வைக் குறிக்கிறது. இயற்கை மற்றும் மனிதனின் செயல்கள் விளக்குவது பொருள்முதல்வாதத் தத்துவம் ஆகும்.
- காட்டுவிலங்குகள் பறவைகள் பொருளாக முதன்மைப் பெறுகிறது. அந்த உயிரினங்களின் வர்ணனைகள் உணர்த்தும் உணர்வுகள் இரண்டாவது கூறாக அறிய முடிகிறது.
- குறுந்தொகையில் முல்லைத் திணைப் பாடல்களில் காட்டு விலங்குகளான மான், பாம்பு, காட்டுப் பூனை, யானை ஆகியன பதிவு செய்யப்பட்டுள்ளன. பறவைகளான காட்டுக் கோழி, மயில், காக்கை ஆகியன பதிவு செய்யப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.
- வேடர்களின் வேட்டைப் பொறிகளில் சிக்கிய மான் குட்டிகளை வளர்த்தனர். ஆண் மானை இறைச்சியாகவும் பெண்மானை பிற மானை பிடிக்கப் பயன்படுத்தும் கருவியாகவும் பயன்படுத்தியுள்ளனர். பெண்மானை பிணைமான் என்று முல்லை நில மக்கள் அழைத்துள்ளனர் என்பதை பாடல் தெளிவுபடுத்துகிறது.
- வேளாண் சமூகம் தோற்றம் பெற்ற காலத்தில் முல்லை நில மக்கள் தினைப்புனம் காத்தல் தொழிலில் இடுப்பட்டனர். இரவில் ஆண்களும், பகலில் பெண்களும் தினைப் பயிர்கள்ளைப் பாதுகாத்துள்ளனர். மான்கள் கூட்டத்தில் ஆண்மானுக்குக் கிளைக்கொம்புகள் காணப்படும் அது பார்ப்பதற்கு ஆபத்து விளைவிக்கும் ஆளவுக்கு இருப்பதால் அதற்கு பொருள் இரலைமான் என்று பெயர் வைத்துள்ளதை அறியலாம்.
- மான்களின் செயல்களும் பண்புகளும் வேட்டைச் சமூகம், கால்நடைச் சமூகம், வேளாண் சமூகம் என்ற பொதுவுடைமைச் சமுதாயக் காலத்தைக் காட்டுவதை ஆய்வின் மூலம் அறியலாம். மானின் இயக்கத்துக்கும் மக்களின் செயலுக்கும் உள்ள தொடர்பு சமூக மாற்றம் நடைபெற்று இருப்பதைக் காட்டுகிறது. வரலாற்றுப் பொருள்முதல்வாதக் கூறுகளான மக்களின் நடவடிக்கைகளையும் மானின் பண்புகளையும் தொடர்பு படுத்தி காலமும் உறவுகளும் சமூக மாற்றம் நடைபெற்றதைக் காட்டுகிறது.
- முல்லை நில மக்கள் மானைப் போல பாம்பையும் இனங்கண்டு இரு வகையாக பிரித்துள்ளனர். விசம் உள்ள பாம்பு, விசம் இல்லாப் பாம்பு விசம் உள்ள பாம்பிற்கு **அரவம்** என்று பெயர் வைத்துள்ளனர். அத்துடன் வர்ணனைகளின் வழியாக அடையாளத்தைக் காட்சிப்படுத்தினர். பாம்புகளுக்கு காது கிடையாது, உணர்வுகளின் வழியாக இறையைக் கண்டுப்பிடிக்கிறது என்று பதிவு செய்துள்ளனர். பாம்புக்கு தலையில்தான் விசம் என்பதை அறிந்து பாம்பின் தலையைத் துண்டிக்குமாறு பாடலில் அறிவுரையைப் பதிவு செய்துள்ளனர். பாம்பு மழைக்காலத்தில் பூமியின் மேற்பரப்பில் வரும் என்பதையும் பதிவு செய்துள்ளனர். குறுந்தொகை 391, 190 பாடலின் பதிவுகளின் வழி காட்சிப்படுத்தப்படுவது நல்ல பாம்பு, கண்ணாடி விரியன் ஆகியவையாகும்.

- யானை, காட்டு நிலப்பகுதியில் சுற்றிதிரிந்து உணவுகள் உண்டு மலைப்பக்கத்தில் அடந்த மரங்கள் இருக்கும் இடத்தில் துணையோடு தங்கும். குறிஞ்சி திணைக் குரிய விலங்கு யானை ஆகும். அதனை முல்லை நில மக்களும் அறிந்து வைத்துள்ளனர். இது பண்டமாற்ற முறையில் இரு நிலத்துக்கும் உள்ள தொடர்பைக் காட்டுவதாக உள்ளது.
- காட்டுப் பூனையின் வரிசையான குரிய பற்கள் முல்லை மொட்டுக்கு உவமையாகச் சொல்லப்படுகிறது. இதனை, வேட்டைச் சமூகம் மூலம்தான் அறிந்து இருக்க முடியும். வரலாற்றுப் பொருள்முதல்வாதக் கூறுகளான இயக்கம், காலம், தொடர்பு, மாற்றம் என அனைத்துக்கும் உறவுகொள்ளும் பொருளாக காட்டுப் பூனை உள்ளது. வேட்டைச் சமூகம், கால்நடைச் சமூகம், வேளாண் சமூகம் என்ற மூன்று சமூகத்தின் தொடர்பை வெளிப்படுத்துவதாக காட்டுப் பூனை அமைந்துள்ளது.
- மயிலை முல்லை நில மக்கள் மஞ்ஞை என்ற பெயர் கொண்டு அழைத்துள்ளனர். இது மலையாளத்திலும் உண்டு. கார்கால வரவைக் காட்டும் பொருளாக மயில் உள்ளது. மயில் கூட்டமாக வாழ்வதைப் பார்த்து மக்களும் கூட்டாக வாழ கற்றுக்கொள்கின்றனர். மயில் என்ற பொருள்மேல் மனிதர்களின் உணர்வு வெளிப்படுவதைப் பொருள்முதல்வாதம் என்று கூறலாம். கார்காலம் பிரிந்தவர்கள் வந்து சேர்ந்து வாழும் காலம் ஆகும். கார்காலத்தில் உழவு தொழிலில் மக்கள் ஈடுப்படுகின்றனர். குடும்பம் என்ற சமூக அடிப்படையைக் கார்காலம் தோற்றுவிக்கிறது.
- காக்கையின் செயல்பாடுகளையும் முல்லை நில மக்கள் பதிவு செய்துள்ளனர். பழந்தமிழரின் நம்பிக்கையாகவும் பண்பாட்டுக் கூறாகவும் காகம் உள்ளது. காக்கை கரைந்தால் விருந்தினர்கள் வீட்டுக்கு வருவார்கள் என்ற நம்பிக்கையில் பதிவு செய்துள்ளனர். காக்கை கரைதல் என்ற செயல் மூலம் உலகில் உள்ள எல்லாச் சமூக மக்களுக்கும் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருளாக அமைகிறது. பறவைகள் அனைத்தும் புதியதாக விலங்குகளையும் மனிதர்களையும் பார்த்தால் கத்தும், கூச்சல் போடும். தன்னைப் பாதுகாத்துக்கொள்ள செய்யும். இந்த செயலை முல்லை நில மக்கள் அறிந்துள்ளனர். இன்று காகம், சேவல், நாய், பூனையைப் போல விட்டில் ஒரு உறவாக வளர்க்கப்படுகிறது.
- இயற்கையான பொருள்களின் செயல்களை அறிந்த முல்லை நில மக்கள் அவற்றை தமக்கு சாதகமாக பயன்படுத்தியுள்ளதைக் காணலாம். எல்லாம் இயற்கை பொருள் ஆகும். காட்டு விலங்குகள் பறவைகள் அவற்றின் பண்புகள் செயல்கள் வழி முல்லை நில மக்களின் வாழ்வியலான தொழில்கள், சமூகம், சமுதாயம், பாதுகாப்பு, வளர்ச்சி, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், மக்களின் தனித்த பண்புகள் போன்ற இக்கட்டுரையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**துணைநூற் பட்டியல்**


1. பிச்சமுத்து ந., 2006, இலக்கிய இயக்கங்கள், சக்தி வெளியீடு, சென்னை.
2. தமிழண்ணல், 2022, குறுந்தொகை, கோவிலூர் மடாலயம், கோவிலூர்.
3. மோனிஷா கி, தொல்காப்பியரின் வழி திணை மற்றும் பால் கோட்பாட்டை உணர்த்தும் தொன்னூலார், தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ், E-ISSN: 2581-7140, இதழ் -6, தொகுதி -2, 2024.
4. கவிதா அ, சங்க இலக்கியத்தில் அறிவியல், ஆய்த எழுத்து பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், 2019.
5. வானமாமலை நா., 2022, தமிழர் பண்பாடும் தத்துவமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். வெளியீடு, சென்னை.
6. முப்பால்மணி கி., 2020, தமிழக மெய்யியலில் உலகாயதம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். வெளியீடு, சென்னை.
7. முத்துமோகன் ந., 2012, இயங்கியல் பொருள்முதல்வாதம் ஓர் அறிமுகம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். வெளியீடு, சென்னை.
8. நியூ செஞ்சுரி ஆசிரியர் குழு, 2012, வரலாற்றுப் பொருள்முதல்வாதம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். வெளியீடு, சென்னை.
9. கோவைவாணன், 2013, சங்க இலக்கிய மெய்யியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். வெளியீடு, சென்னை.
10. சுப்பிரமணியன் கா., 2019, சங்ககாலச் சமுதாயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். வெளியீடு, சென்னை.
11. ஞானசம்பந்தன் சண்முக., 2024 ஏப்ரல், திணைக் கொள்கை உருவாக்கமும் சடங்கியல் தொன்மவியல் மூலங்களும், உங்கள் நூலகம் மாத இதழ், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். வெளியீடு, சென்னை.
12. முத்துமோகன் ந., 2021, இந்தியத் தத்துவங்களும் தமிழின் தடங்களும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். வெளியீடு, சென்னை.
13. முத்துமோகன் ந., 2007, மார்க்சியக் கட்டுரைகள், காவ்யா வெளியீடு, சென்னை.
14. பெருமாள் சாமி வெ., 2013, சங்க இலக்கியக் காட்சிகள் ( மார்க்சிய வெளிச்சத்தில்), பாரதி புத்தகாலயம் வெளியீடு, சென்னை.
15. மிலிட்டரி பொன்னுசாமி, 2014, இயக்கவியல் பொருள்முதல்வாதம் (மாரிஸ் கான்போர்த்), பாரதி புத்தகாலயம் வெளியீடு, சென்னை.
16. பேரின்பன் தேவ., 2014, தமிழர் வளர்த்த தத்துவங்கள், பாரதி புத்தகாலயம் வெளியீடு, சென்னை.
17. பக்தவத்சல பாரதி, 2020 ஜனவரி, சங்க்கால உணவின் பொருளியல் பரிமாணங்கள், பிறழ் மாத இதழ், மதுரை.

18. கிருஷ்ணராஜா சோ., 2007, சங்ககாலச் சமூகமும் சமய-மெய்யியற் சிந்தனைகளும், குமரன் புத்தக இல்லம் வெளியீடு, சென்னை.
19. திருஞானசம்பந்தம் ச., 2018, தொல்காப்பியம் பொருளதிகாரம்(மூலமும் உரையும்), கதிர் பதிப்பகம், திருவையாறு.

## References

1. Pichamuthu, N. (2006). *Literary Movements*. Sakthi Publications, Chennai.
2. Tamilannal (2022). *Kurunthogai*. Koviloor Madalayam, Koviloor.
3. Monisha, K. (2024). *The Ancient Texts That Convey Thinai and Paal Theory Through Tholkappiyar*. International Journal of Tamil Language and Literature, E-ISSN: 2581-7140, Issue 6, Volume 2.
4. Kavitha, A. (2019). *Science in Sangam Literature*. Aaytha Ezhuthu International Tamil Studies Journal.
5. Vanamamalai, N. (2022). *Tamil Culture and Philosophy*. New Century Book House (P) Ltd., Chennai.
6. Muppalmani, K. (2020). *Globalism in Tamil Metaphysics*. New Century Book House (P) Ltd., Chennai.
7. Muthumohan, N. (2012). *An Introduction to Dynamic Materialism*. New Century Book House (P) Ltd., Chennai.
8. New Century Editorial Team (2012). *Historical Materialism*. New Century Book House (P) Ltd., Chennai.
9. Kovai Vaanan (2013). *Metaphysics in Sangam Literature*. New Century Book House (P) Ltd., Chennai.
10. Subramanian, K. (2019). *Sangam Era Society*. New Century Book House (P) Ltd., Chennai.
11. Gnanasambandan Shanmuga (April 2024). *Formation of Thinai Theory and Ritual-Mythological Sources*. Ungal Noolagam Monthly Magazine, New Century Book House (P) Ltd., Chennai.
12. Muthumohan, N. (2021). *Indian Philosophies and Tamil Traces*. New Century Book House (P) Ltd., Chennai.
13. Muthumohan, N. (2007). *Marxist Essays*. Kavya Publications, Chennai.
14. Perumal Sami, V. (2013). *Sangam Literary Scenes (In Marxist Perspective)*. Bharathi Puthakalayam Publications, Chennai.
15. Military Ponnusamy (2014). *Dynamic Materialism (Maurice Cornforth)*. Bharathi Puthakalayam Publications, Chennai.
16. Perinban Dev (2014). *Philosophies Nurtured by Tamils*. Bharathi Puthakalayam Publications, Chennai.
17. Bhaktavatsala Bharathi (January 2020). *Economic Dimensions of Sangam Era Food*. Pirazh Monthly Magazine, Madurai.
18. Krishnaraja So. (2007). *Sangam Era Society and Religious-Metaphysical Thought*. Kumaran Book House Publications, Chennai.
19. Thirugnanasambandham, S. (2018). *Tholkappiyam – Porul Adhikaram (Text and Commentary)*. Kathir Publications, Thiruvaiyaru.

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.